OS: 302/2018

Date: 24.11.2022

பெயர் : நீலமேகம்

**வாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி - 13, 14, 15 பிரதிவாதிகள் தரப்பில்**

தாவாவில் 13, 14, 15 பிரதிவாதிகளை தரப்பினர்களாக சேர்த்துள்ளதற்கான காரணம் என்ன என்றால் 12ம் பிரதிவாதி வழக்கு சொத்துக்களை வேறு நபர்களுக்கு விற்பனை செய்ய முயற்சிப்பதாக தெரிய வந்ததால் கட்சி சேர்த்தேன். என்னென்ன கோரிக்கைகள் அவர்களிடம் கேட்டுள்ளேன் என்றால் 1974ல் 40 செண்ட் நிலம் போலி கிரயமும், 1978ம் வருடம் 1 ஏக்கர் 18 செண்ட் போலி கிரயம் செய்யப்பட்டுள்ளது, அதில் எங்களுக்கும் பாத்தியம் இருப்பதால் 13 முதல் 15 பிரதிவாதிகளை இவ்வழக்கில் கட்சி சேர்த்துள்ளேன். நான் தாக்கல் செய்த வழக்குரையில் 13 முதல் 15 பிரதிவாதிகளை பொறுத்து எந்தவிதமான பரிகாரமும் கேட்கப்படவில்லை என்றால் சரியல்ல.

இவ்வழக்கு வாதிகளையும், பிரதிவாதிகளையும் உள்ளடக்கிய மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் ஒரு வழக்கு இதே சொத்து சம்மந்தமாக நடத்தப்பட்டது என்றால் அது எனது சித்தப்பா நடத்தினார். அந்த தாவா பற்றி இவ்வழக்கிலும் குறிப்பிட்டுள்ளேன், அவர் இறந்ததால் இவ்வழக்கை தொடர்ந்து நடத்துகிறேன். மேட்டூர் நீதிமன்றத்தில் இருந்த வழக்கு ஏற்கனவே தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அ.வ.28/2011 வழக்கானது ஏற்கனவே மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

இந்த பிரதிவாதிகளை உள்ளடக்கிய ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது இதே அதிகார வரம்புடைய நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு தள்ளுபடி ஆகிவிட்டது என்பதால் அதே வழக்குமூலத்தை கொண்டு மீண்டும் என்னால் இவ்வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. மேட்டூர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அ.வ.95/2016 என்றால் சரிதான். 1978ம் ஆண்டு ஆவணத்தை பற்றி செல்லாது என நான் கேட்பதால் காலவரையறை சட்டத்தின்படி என்னால் மேற்படி பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. மேற்படி 1978ம் ஆண்டு ஆவணம் எழுதி நிறைவேற்றப்பட்டு அது தொடர்ந்து நடைமுறையில் இருந்து வரும் நிலையில் நான் 38 ஆண்டுகளுக்கு பின்னிட்டு இவ்வழக்கை தாக்கல்

செய்துள்ளது ஏற்புடையதாக இல்லை என்றால் சரியல்ல. அரசு தரப்பினரை வழக்கிற்கு அவசிய தரப்பினராகத்தான் கட்சி சேர்க்கப்பட்டுள்ளது, அவர்களுக்கு எதிராக எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். இந்திய பதிவாண்மையின் சட்டத்தின் கீழ் முறையாக ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளதால் அதனை ரத்து செய்ய கோர முடியாது என்றால் சரியல்ல. வழக்கில் ஆவண ரத்து சம்மந்தமாக தாவா 13 முதல் 15 பிரதிவாதிகளிடம் எந்த பரிகாரமும் கேட்கப்படவில்லை என்றால் சரிதான்.

<u>**மறுவிசாரணை**</u>

இல்லை.

**ஒப்பம்/PW1**

**ஒப்பம்/சார்பு நீதிபதி, ஓமலூர்**